
# “காலம் உள்ளவரை கலைஞர்” நவீன கண்காட்சி - முதல்வர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டார்!






முதலமைச்சர் .மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (9.6.2024), கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி ராஜா அண்ணாமலை மன்றத்தில் அமைக்கப்பட்டுள்ள “காலம் உள்ளவரை கலைஞர்” என்ற நவீன கண்காட்சியகத்தை பார்வையிட்டார். மேலும் கண்காட்சியில் Virtual Reality தொழில்நுட்பத்துடன் கூடிய 3D கேமராவில் பதிவு செய்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வரலாற்று குறும்படத்தையும் முதல்வர் அவர்கள் பார்வையிட்டார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் மற்றும் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, பி.வில்சன், திரைப்பட இயக்குநர் கரு.பழனியப்பன், கவிஞர் பா.விஜய் ஆகியோர் உள்ளனர்.

சென்னை, ஜீன் 11-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில் இராஜா அண்ணாமலை மன்றத்தில் கலைஞர் 100 முதன்முறையாக மாபெரும் பிரம்மாண்ட மெய்நிகர் அரங்கம், கலைஞரை மீண்டும் நேரில் சந்திக்கும் ஆச்சர்ய அனுபவத்தை தூண்டும் வகையில் வரலாற்று சிறப்புமிக்க “காலம் உள்ளவரை கலைஞர்” நவீன கண்காட்சியகத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.6.2024) பார்வையிட்டார்.

இப்பிரம்மாண்ட அரங்கத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வாழ்க்கையில் நடந்த முக்கிய நிகழ்வுகளான “திருவாரூரில் ஆரம்பித்து சென்னை மெரினா கடற்கரை நினைவிடம் வரை” என நூற்றுக்கும் மேற்பட்ட அரிய வகை புகைப்படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

இக்கண்காட்சி அரங்கிற்குள் உள்ளே நுழைந்ததும் முப்பரிமாண தொழில்நுட்பத்துடன் கூடிய 40 வயது தோற்றத்துடன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நேரடியாக மக்களுடன் தமிழைபோற்றி பேசும் கவிதை காவியம் இடம்பெற்றுள்ளது. “வாழும் வரலாறு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கதைப்பாடல்” காட்சிகள் இடம் பெற்றுள்ளது.

மற்றொரு அரங்கில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எப்போதும் அவர் விரும்பும் முரசொலி அலுவலகத்தில் உரையாடுவதுபோல் ஒரு செல்பி பாயிண்ட் (Selfie Point) மெழுகு சிலை அமைக்கப்பட்டுள்ளது. இங்கு எடுக்கப்படும் செல்பி புகைப்படங்கள் குறுஞ்செய்தியாக பார்வையா ளர்களுக்கு உடனுக்குடன் அனுப்பி வைக்கப்படும்.

மேலும், ஒரு அரங்கில் மெய்நிகர் (VR effects) தொழில்நுட்பத்துடன் 3D கேமராவில் பதிவு செய்த கலைஞரின் வரலாற்று காவியமும் கலைஞர் வழியில் தொடரும் திராவிட அரசை மக்கள் போற்றும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இவ்வரங்கம் திறக்கப்பட்ட நாள் முதல் தினந்தோறும் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், திரைப்படக் கலைஞர்கள், தியாகராஜன், பிரசாந்த், விஜயகுமார், சத்தியராஜ், நாசர், ராஜேஷ், மூத்த பத்திரிக்கையாளர்கள், பொதுமக்கள், மாணவர்கள், ஆகியோர் வருகை தந்து, அவருடைய வாழ்க்கை வரலாறு, அரசியல் பயணம் போன்ற முக்கிய சாதனைகள் அனைத்தையும் விளக்கும் குறும்படங்கள், பல்வேறு துறைகளில் அவர் புரிந்த சாதனைகள் குறித்து ஆர்வத்துடன் பார்வையிட்டு வருகின்றனர்.

“காலம் உள்ளவரை கலைஞர்” நவீன கண்காட்சியகத்தை நேற்று முன்தினம் (9.6.2024) பார்வையிட்ட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இக்காண்காட்சியகத்தை ஏற்பாடு செய்த இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, குறும்படத் தயாரிப்புக்கு உதவிய கவிஞர் பா.விஜய், புகைப்படங்களை வடிவமைத்த அரசு ஆர்ட்ஸ் கோபி, மெய்நிகர் பரிமாண தொழில்நுட்பத்திற்கு உதவிய பாரதி மற்றும் கண்காட்சிக்கு உதவிய அனைவருக்கும் சால்வை அணிவித்து பாராட்டினார்.

இந்நிகழ்வின் போது திருமதி துர்கா ஸ்டாலின் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, பி.வில்சன், திரைப்பட இயக்குநர் கரு. பழனியப்பன், கவிஞர் பா.விஜய் ஆகியோர் உடனிருந்தனர்.

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமை! மாங்காடு நகரத்தில்

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு மக்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்!

### நகரச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஜுன் 11-

மாங்காடு நகரச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா வேண்டுகோள் வருமாறு:-

திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதியில் இந்தியா' கூட்டணி வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்ற கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு மாங்காடு நகரத்தில் நாளை (12ந் தேதி) பொதுமக்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்.

மாங்காடு நகரத்தில் - வட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமையில் நாளை (12.6.2024 - புதன்கிழமை) காலை 8.30 மணியளவில் பட்டு கூட்ரோட்டிலிருந்து வரவேற்பு அளிக்கப்பட்டு மாங்காடு பஜாரிலும் 9 மணியளவில் திருமுருகன் நகர் அருகிலும் (குணசுந்தரி திருமண மண்டபம்) 9.30 மணியளவில் தோப்பு தெருவிலும் இறுதியாக பட்டூர் பேருந்து நிலையம் அருகிலும் பொதுமக்களை சந்தித்து நன்றி கூறுகிறார்.

எனவே மாங்காடு நகரக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், வார்டுச் செயலாளர்கள், கழகச் செயல்வீரர்கள் அனைவரும் தவறாமல் இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு நகரக் கழகச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா கேட்டுக்கொண்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் முகாம் அலுவலகத்தில் நேற்று (10.6.2024) கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு அவர்கள், ஏ.டி.சி. வரதராஜன் மற்றும் திருமதி பரமேஸ்வரி வரதராஜன் தம்பதியரின் மகன் வி. ஸ்ரீராம் (எ) கமல் – பி. ரம்யா ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்தார். உடன் சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கு நிதி உதவி!

## த.மு.மு.க. மாநிலச் செயலாளர் ஹாஜாக்கனி வழங்கினார்!

திருவாரூர், ஜுன் 11-

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டியில் இந்தியா கூட்டணியில் அங்கம் வகிக்கும் தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்ற கழகத்தின் ஆலோசனை கூட்டத்தில், பொருளாதாரத்தில் பின் தங்கிய இஸ்லாமிய மக்களுக்கு நிதி உதவிகளை தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்ற கழகத்தின் மாநில பொதுச் செயலாளர் ஹாஜாக்கனி வழங்கினார்.

தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்ற கழகத்தின் ஆலோசனை கூட்டம் கடியாச்சேரி காதர் இல்ல வளாகத்தில் நடைபெற்றது. திருவாரூர் மாவட்ட த.மு.மு.க. நிர்வாகி முஜிபுர் ரஹ்மான் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தமுமுக நிர்வாகி செய்யது யூசுப் வரவேற்புரை வாசித்தார்.

தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்ற கழக மாநில பொது செயலாளர் ஹாஜாக்கனி சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

அப்போது நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வில் விட்டுக்கட்டி, கடியாச்சேரி பள்ளங்கோவில், மேட்டுப்பாளையம் பகுதிகளில் வசிக்கும் பொருளாதாரத்தில் பின்தங்கிய முஸ்லீம் மக்களுக்கு குடும்ப செலவுகளுக்கும், மருத்துவ சிகிச்சைகளுக்கும் நிதி உதவிகளை ஹாஜாக்கனி வழங்கினார்.

கூட்டத்தின் நிறைவில் நகர தலைவர் இக்பால் நன்றி கூறினார்.

ஒன்றியச் செயலாளர் கட்டிமேடு அன்சாரி, கடியாசேரி ஜமாஅத் மன்ற நிர்வாகிகள் அப்துல் காதர், ஜெகபர் சாதிக், வர்த்தகர் சங்க நிர்வாகி தாவூது உள்ளிட்ட பலர் நிகழ்வில் பங்கேற்றனர்.





விழுப்புரம் தனியார் கிறித்தவ பள்ளி (Sacred Heart ICSE) திறப்பு விழாவில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார். மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் தயா. இளந்திரையன், நகரச் செயலாளர் இரா.சக்கரை, பள்ளி நிர்வாகிகள் குளோரியா, மங்கலம், நிர்மல் சுற்றுச் சூழல் அணி பானாம்பட்டு பால்ராஜ், நகர மன்ற உறுப்பினர் சத்தியவதி வீரா, தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு, இளைஞர் அணி இராஜசேகர், வார்டுச் செயலாளர் சண்முகம், முன்னாள் செயலாளர் பாவாடை, பள்ளி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.